ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka

අති විශෙෂ அதிவிசேஷமானது EXTRAORDINARY

අංක 883/6 – 1995 අගෝස්තු 09 වැනි බදාදා – 1995.08.09
883/6 ஆம் இலக்கம் — 1995 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆம் திகதி புதன்கிழமை
No. 883/6 – WEDNESDAY, AUGUST 09, 1995

(ආණ්ඩුවේ බලය පිට ප්‍රසිද්ධ කරන ලදී.) (அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது) (Published by Authority)



# பகுதி I : தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

எல். டீ. — பி. 21/78 III.

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

### 27 (1) எனும் பிரிவின் கீழான கட்டளை

1995 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி, உயர் கல்வி அமைச்சர் றிச்சாட் பத்திரன ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, இக்கட்டளை மூலம், (இதனகத்துப் பின்னர் ' இயைபான கட்டளை ' எனக் குறிப்பீடு செய்யப்படும்) களனிப் பல்கலைக்கழகம், இலங்கை, தொடர்பாகச் சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றென சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் பயனைக்கொண்டு, கருதப்படும் கட்டளையை, இயைபான கட்டளையில் எடுத்துக்காட்டப்பட்டிருப்பதாக கருதப்படுவனவும், இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கற்கைப் பகுதிகளைக் கொண்டிருப்பனவுமான துறைகளுக்கு மருத்துவ துறையை 1989 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் தேதியிலிருந்து சேர்ப்பதன் மூலம் திருத்துகிறேன்.

றிச்சாட் பத்திரன,
கல்வி, உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
1995 ஓகத்து 07.

அட்டவணை

1. உடலமைப்பியல் பகுதி
2. உடற்றொழிலியல் பகுதி
3. உயிரிரசாயனவியல் பகுதி
4. நுண்ணுயிரியல் பகுதி
5. ஒட்டுண்ணியியல் பகுதி
6. நோயியல் பகுதி
7. வாகடவியல் பகுதி
8. சட்ட மருத்துவப் பகுதி
9. சமூக மருத்துவப் பகுதி
10. மருத்துவப் பகுதி
11. சத்திர சிகிச்சைப் பகுதி
12. மகப்பேற்று, பெண்ணோயியல் பகுதி
13. சிறுவர் மருத்துவப் பகுதி
14. மனநோயியல் பகுதி